20-01-2025.

S.C.No.11/2021

Crl.M.P.No.4465/2023 மனுவானது 11.12.2023 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் அ.சா.4 விஜயகுமார் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி குறுக்கு விசாரணை

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி எனது பக்கத்து வீட்டுக்காரர். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நானும் வினோத்தும் எதிரி சங்கிலியை எவ்வளவு தூரம் விரட்டினோம் என்றால் 20 மீட்டர் அளவில் விரட்டினோம். அந்த தெருவில் எங்களை தவிர நிறைய ஆட்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ள நாங்கள் போய் பார்த்தபோது கிருஷ்ணமூர்த்தி இடது மார்பு பகுதியில் கத்திக்குத்து பட்டு கீழே கிடந்தார் என்ற விவரம் தவிர வேறு விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சங்கிலி கையில் இரத்தத்துடன் கூடிய கத்தி இருந்ததை நான் பார்த்தேன். சங்கிலிக்கு பின்னால் நான் விரட்டிச்சென்றபோது அவர் வைத்திருந்த கத்தியை பார்ப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். நான் காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தியை மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்க்கவில்லை என்றும் கிருஷ்ணமூர்த்தி என் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் கொண்டுபோய் சேர்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA Digitally signed by A MUTHUSARATHA Date: 2025.01.20 16:56:44 +0530

Principal District Judge,
Dindigul.